"Chandra Raka"

A very interesting Tamil Novel

BY

Mr. S. M. Appasawmi Naidu

சந்திர ரேகா

(அற்புதமான தமிழ் நாவல்.)

நீதி நூலுக்கு நூலாகவும் இன்பமான கதைக்குக்

கதையாகவுமிருக்கும்படியாக

ம-ள-ள-ஸ்ரீ எஸ். எம். அப்பாசாமி நாயுடு

அவர்களால் இயற்றப்பட்டது.

வாசிக்க வாசிக்க இன்பமாயிருக்கும்.

கம்பராமாயணம், கைவல்லியம், திருக்குறள், பாரதம், பாகவதம், பகவத்கீதை முதலியவைகளிலிருந்து மேற் கோள்கள் எடுத்துக் கூறப்பட்டிருக்கின்றன.

தும்ப மலர்போல வெளுப்பான கடுதாசியில் முத்துப்போன்ற எழுத்துகளால் அச்சிடப்பட்டு நேர்த்தியாகப் பயிண்டு செய்யப்பட்டிருக்கிறது.

விலை—தபால் சார்ஜ் உள்பட ரூ. 1

மானேஜர்,

இந்தியன் லா ஜர்னல் ஆபீஸ்,

117, அரமனைக்காரத் தெருவு, சென்னை.

ஸ்ரீ

பெரியாழ்வார் அருளிச்செய்த

திருப்பல்லாண்டும் பெரியாழ்வார் திருமொழியும்

இவை வைத்த மாநிதி—முடும்பை

கோபாலகிருஷ்ணமாச்சாரியார் அவர்களால்

உரையுடன் இயற்றப்பட்டது.

இதனுள் அடங்கியவை.

1. பெரியாழ்வார் சரித்திரம்
2. திருப்பல்லாண்டு (உரையுடன்)
3. பெரியாழ்வார் திருமொழி (உரையுடன்)
4. செய்யுள் முதற்குறிப்பு அகராதி

குறிப்பு:—இதில் அவசியமான பதப்பிரயோஜனங்களையும் இன்றியமையாத இலக்கணக் குறிப்புகளையும், புராணக்கதைகளையும் எடுத்துக்காட்டி, பதப்பொருள், கருத்து, விசேஷார்த்தம், சொற்சுவை, பொருட்சுவை, யாப்பிலக்கணம், அணியிலக்கணம், ஐதிஹ்யம் அங்கங்கே விளக்கியிருத்தலோடு ஸ்ரீவைஷ்ணவ சம்பிரதாயங்களையும் விவரிக்கப்பட்டிருக்கிறது. பூர்வாசார்யர்களின் வியாக்கியான வாக்கியங்களும் உரிய இடங்களில் எடுத்தாளப்பட்டுள்ளன. அத்தியாபகர்க்கு மிகவும் அனுகூலமாகயிருக்கும். இதன் விலை ரூ. 1 4 0.

தபால் கூலி பிரத்தியேகம்.

மானேஜர், "இந்தியன் லா ஜர்னல் ஆபீஸ்,"

117, அரமனைக்காரத் தெருவு, சென்னை.

THE INDIAN LAW JOURNAL.

(TAMIL EDITION.)

இந்தியன் லா ஜர்னல்.

(தமிழ் பிரசுரம்.)

(மாதம் நான்குமுறை ஒவ்வொரு சனிக்கிழமையும் பிரசுரிக்கப்படுகிறது.)

OFFICE OF THE REGISTRAR OF BOOKS. REGISTERED 27 AUG 1914 MADRAS.

வருஷசந்தா.

	ரூ.அ.பை.
இந்தியா, பர்மா, ரெங்கூனுக்கு தபால் சார்ஜ் உள்பட	5—4—0
சிங்கப்பூர் பினங்கு	8—0—0
ஒரு வார சஞ்சிகை	0—2—0

பத்திரிகை வேண்டியவர்கள் சந்தாத் தொகையை அனுப்பி கடிதம் எழுதவேண்டும். இல்லாவிடில் வி. பி. தபாலில் அனுப்பும்படி உத்திரவு செய்யவேண்டும்.

மாதிரி சஞ்சிகை வேண்டியவர்கள் ½ அணு தபால் ஸ்டாம்பு அடக்கம் செய்து அனுப்பவேண்டும்.

விளம்பர விகிதம்.

	ரூ. அ. பை.
48 சஞ்சிகைகளிலும் ஒரு வருடத்திற்கு ஒரு பக்கத்திற்கு	120–0—0
6 மாதங்களுக்கு ...	60–0—0
3 ,, ...	35–0—0

இந்த பிரகாரம் பாதி பக்கத்திற்கும், கால் பக்கத்திற்கும் கணக்கு செய்துகொள்ளவேண்டும். சாஸ்வத ஒப்பந்தம் செய்கிறவர்கள் மானேஜருடன் ஒப்பந்தம் செய்துகொள்ளவேண்டும்.

விளம்பரம்.

இந்தியன் லா ஜர்னலுக்கு சந்தாதார்கள் சேர்க்க கமிஷன் ஏஜண்டுகள் தேவை.

மானேஜர்,

இந்தியன் லா ஜர்னல் ஆபீஸ்,

117, அரமனைக்காரத் தெருவு, சென்னை.

ABBREVIATIONS

குறிப்புகள்.

I. L. R.=Indian Law Reports.

இ. லா. ரி.=இந்தியன் லா ரிப்போர்ட்டுகள்.

5 Mad. 145=5 Madras 145.

5. சென். 145=5-வது வால்யூம், சென்னப்பட்டணம், 145-வது பக்கம்.

Cal=Calcutta.

கல்=கல்கத்தா.

Bom=Bombay.

பம்=பம்பாய்.

All=Allahabad.

அல=அலகபாத்.

I. C=Indian Cases

இ. கே=இந்தியன் கேஸ்கள்.

I. L. J=Indian Law Journal.

இ. லா. ஜெ=இந்தியன் லா ஜர்னல்.

M. L. J=Madras Law Journal.

ம. லா. ஜெ=மதிராஸ் லா ஜர்னல்.

M. W. N=Madras Weekly Notes.

ம. வி. நோட்=மதிராஸ் வீக்லி நோட்டீஸ்.

(இன்னும் சேர்க்கப்படும்.)

இந்தியன் லா ஜர்னல்

மாதம் நான்குமுறை ஒவ்வொரு சனிக்கிழமையும் பிரசுரிக்கப்படுகிறது.

Vol. 1. தொ. 1. | 22ND AUGUST 1914. | No. 2. நெ. 2.

இந்தியன் லா ஜர்னல்.

1914௵ ஆகஸ்டு௴ 22௳ சனிக்கிழமை.

WAR AND TRADE.

சண்டையும் வியாபாரமும்.

இப்பொழுது நம் மகாசக்ரவர்த்திக்கும் ஜர்மனி, ஆஸ்டிரியா என்ற இரண்டு தேசத்தாருக்கும் நேரிட்டு அதி மும்மரமாய் நடந்து வரும் யுத்தம் காரணமாய் நம் மகா சக்ரவர்த்தி ஐந்தாம் ஜார்ஜ் ஓர் உத்திரவு சாற்றி வைத்திருக்கிறார். அதென்னவென்றால், தம் அரசாட்சிக்கு உட்பட்ட யாவத் ஜனங்களும் நம் விரோதி தேசத்து ஜனங்களிடம் சரக்குகள் வாங்கவாவது விற்கவாவது கூடாதென்றும், அவர்களுக்கு பாக்கி சாக்கியிருந்தால் பணங்களை கொடுக்கக்கூடாதென்றும் மற்றப்படி எவ்வித எழுத்து மூல சம்மந்தமாவது இருக்கக்கூடாதென்பதாம்.

இந்த உத்திரவினாலும் ஏற்கனவே உள்ள சட்டங்களினாலும் நம் விரோதி அரசாட்சிக்கு உள்பட்டவர்கள் நம் சக்ரவர்த்தியினுடைய ஆளுகைக்கு உள்பட்ட ராஜ்யங்களில் எங்கேயாவது ஸ்திரவாஸிகளாயிருந்து கொண்டு வியாபாரங்களை செய்து வந்தால் இந்த யுத்தம் முடிந்து நம் சக்ரவர்த்தியினுடைய மறு ஆக்ஞை பிறக்கிறவரையில் அவர்கள் தங்களுக்கு பணம் வரவேண்டியிருந்தாலும் வேறு வியவகாரங்களிருந்தாலும் நம் கோர்ட்டுகளில் தாவா செய்யத்தகாது. இந்த யுத்தம் ஆரம்பிக்கும் முன்னமேயே அவர்கள் தாவாக்கள் செய்திருந்தால் இந்த யுத்தம் முடியும் வரையிலும் அந்த வியாஜ்யங்கள் எவ்வித விசாரணைக்கும் கொண்டுவரப்படாமல் நிறுத்தி வைக்கப்படும். ஆனால் நம் சக்ரவர்த்தியினுடைய பிரஜைகள் விரோதி ராஜ்யத்தின் பிரஜைகள் பேரில் எவ்வித வியவகாரமும் நடத்திக்கொள்ளலாம்.

PRIVY COUNCIL.

பிரிவி கவுன்சில்.

பீடர் சார்லெஸ் எர்னெஸ்ட்பாலும் மற்றொருவரும் } அப்பீல் வாதிகள்.

v.

வில்லியம் ராட்ஸனும் மற்றவர்களும் அப்பீல் பிரதிவாதிகள்.

வெளிச்சத்திற்காக பாத்தியதை—ஈஸ்மெண்ட்.

ஒருவர் இருபது வருஷத்திற்குமேல் அதிக வெளிச்சம் அனுபவித்தார் என்பது மாத்திரமே, அவ்வளவு வெளிச்சத்திற்கும் அவருக்கு நிராக்ஷேபணையான பாத்தியதையை உண்

டாக்காது. சாதாரணமாய் சுகஜீவனத்திற்கு அனுகுணமானவும் அவ்விடத்தில் செய்யும் வியாபாரத்திற்கு அவசியமாய் வேண்டியதும் எவ்வளவோ அவ்வளவுக்குத்தான் இருபது வருஷத்திற்கு மேல் அனுபவ பாத்தியதை கொடுக்கும்.

1911, August 1, கல்கத்தா ஐக்கோர்ட் தீர்மானம். அதினின்றும் பிரிவிகவுன்சில் தீர்மானம்.

விஷயம் :—இந்த அப்பீல் வாதிகளுடையது. கல்கத்தா எஸ்பிளநேட் 7-ம் நெ. கட்டடம் பிரதிவாதிகள் அந்த கட்டடத்திற்கு கீழ்புறத்தில் வாதிகள் கட்டடத்தின் கிழண்டை சுவருக்கு 17-அடி தள்ளி ஓர் கட்டடம் கட்டினார்கள். சுமார் 20 வருஷத்திற்கு மேற்பட்டு அந்த நிலத்தில் இருந்த கட்டடங்கள் தாழ்ந்தவைகள். ஆகையால் இந்த வாதிகளுக்கு அவர்கள் கட்டடத்து கீழ் புறத்து ஜன்னல்களுக்கு வெளிச்சத்திற்காக ஈஸ்மென்ட் பாத்தியதை உண்டாயிருக்கிறதென்பதை பிரதிவாதிகளும் ஒப்புக்கொள்ளுகிறார்கள். பிரதிவாதிகளுடைய புது கட்டடம் முன்னிருந்த கட்டடங்களைவிட அதிக உயரமானவைகள். ஆகையால் வாதிகளினுடைய கிழண்டை ஜன்னல் மூலம் பரவியிருந்த பழமையாயிருந்த வெளிச்சம் குறைந்து போய்விட்டது. அப்படிக் குறையச்செய்தது தங்கள் பாக்கியாபங்கமென்று தாவா.

தீர்ப்பு :—சாதாரணமாய் சுகஜீவனத்திற்கு போதுமான வெளிச்சம் எவ்வளவோ அவ்வளவுக்குத்தான் ஈஸ்மென்ட் பாத்தியதை ஏற்படக்கூடுமென்றும் அதற்குக் குறைவுபடாதவரையில் வியாஜ்ய மூலம் இல்லையென்றும் மூன்று கோர்ட்டார்களும் தாவாவை தள்ளிவிட்டு பிரதிவாதியின் சிலவு தொகை மொத்தமும் வாதி கொடுக்கும்படி தீர்மானம் செய்திருக்கிறார்கள்.

THE HIGH COURT OF MADRAS.

சென்னப்பட்டணம் ஐக்கோர்ட்.

ஆனரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் சதாசிவய்யர்.

ஆனரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் டயாப்ஜி.

வெங்கிடசுப்பய்யர்—அப்பீல்வாதி.

v.

சுப்பரத்தினமய்யரும் மற்றவர்களும். } அப்பீல் பிரதிவாதிகள்.

அடமானபத்திரம் மேடோவர்.—பலாத்காரமாய், மோசடியாய் ஏற்பட்டதென்று நிவர்த்திக்கக்கூடியது.—அடமானதார் மேடோவர் செய்தவரிடத்திலிருந்து பணம் கொடுக்கக்கூடாதென்ற நோட்டீஸ் கிடைத்தபிறகு பணம் கொடுத்தல் செல்லத்தக்கதா. மேடோவர் செல்லாதென்று கோர்ட்டு தீர்மானமானால் அதனுடைய பிரயோஜனம்.

திருச்சிறுப்பள்ளி சப்ஜட்ஜ் அசல் தீர்மானத்திலிருந்து திருச்சிறுப்பள்ளி டிஸ்டிரிக்ட் கோர்ட் அப்பீல். அதிலிருந்து ஐக்கோர்ட் இரண்டாவது அப்பீல்.

விஷயங்கள் :—வாதி பிரதிவாதியிடம் முதல் அடமானம் பெற்றிருந்தார். அதில் தனக்குள்ள பாத்தியதையை தொரைசாமி அய்யங்கார் என்பவருக்கு மேடோவர் செய்துவிட்டார். பிரதிவாதியும் அடமானத் தொகையில் ரூ 230 தொரைசாமி அய்யங்காருக்கு கொடுத்துவிட்டார். பிறகு வாதி தொரைசாமி அய்யங்காருக்கு தான் செய்த மேடோவர் பலாத்காரமாயும் மோசடியாயும் ஏற்பட்டதாகையால் அந்த மேடோவர் சட்டப்படி செல்லாதென்றும் ஆகையால் பிரதிவாதி அவருக்கு தொகையை கொடுக்கக்கூடாதென்றும் நோட்டீஸ் கொடுத்தார். பிறகு பிரதிவாதி அந்த நோட்டீஸை கவனிக்காமல் தொரைசாமி அய்யங்காருக்கு மேலும் மேலும் பணங்களை

செலுத்திவந்தார். பிறகு வாதி 1900-ம் வருஷத்தில் தாவா செய்து தொரைசாமி அய்யங்கார் பேருக்கு செய்த மேடோவர் தன்னை பத்தப்படுத்தாதென்று ஓர் டிக்ரி பெற்றுக்கொண்டார். அந்த டிக்ரியை பெற்றுக்கொண்டு இப்போது தன்னுடைய நோட்டீஸுக்குப் பிறகு பிரதிவாதி தொரைசாமி அய்யங்காரிடம் செலுத்திய தொகைகள் தன்னை பத்தப்படுத்தாதென்று இந்த தாவா செய்திருக்கிறார்.

தீர்ப்பு:—வாதி தன்னுடைய நோட்டீஸுக்கு முன்னே பிரதிவாதி தொரைசாமி அய்யங்காருக்கு செலுத்திய ரூ. 230 தான் ஒப்புக்கொள்ள வேண்டியதுதானென்றும் மற்றப்படி நோட்டீஸுக்கு பின்னால் செலுத்திய தொகைகள் தன்னைபத்தப் படுத்தாதென்றும் அப்படி செலுத்திய நஷ்டத்தை பிரதிவாதியே அடையவேண்டு மென்றும் சொல்லுகிறார். முதலாவது இந்த வாதி கொடுத்த நோட்டீஸில் மேடோவர் சட்டப்படி எவ்விதத்திலும் செல்லாதென்பதாக சொல்லியிருக்கிறதேயல்லது, மோசடியாய் பிறந்ததாகையால் தன்னால் அது நிவர்த்திக்கக்கூடிய தென்றாவது அப்படிநிவர்த்திப்பதற்காக தொரைசாமி அய்யங்கார் பேரில் தான் தாவா செய்யப்போகிறதாகவாவது ஒரு வார்த்தையும் இல்லை. ஆனால் வாதி இந்த மேடோவர் பிறந்தது முதலே அது எவ்விதத்திலும் செல்லத்தகாததாக கவனித் திருப்பதாய் தெரிகிறது. வாதி தொரைசாமி அய்யங்கார் பேரில் தாவா செய்து மேடோவரை ரத்துசெய்விக்கிறதற்குமுன்னே தொரைசாமி அய்யங்கார் இந்த முதல் பிரதி வாதி பேரில் அடமானத்தொகைக்கு தாவா செய்யும் பக்ஷத்தில் இந்த முதல் பிரதிவாதிக்கு யாதொன்றும் பதில் சொல்ல இடமில்லை. (Trimbak Bhikaji *v.* Shankar Shamrav; Rajah of Ramnad *v.* Arunachellam Chettiar.)

ஆகையால் இந்த முதல் பிரதிவாதி மேடோவர் கோர்ட் மூலமாய் ரத்து செய்விக்கப்படும் வரையில் அடமான பாத்தியதையெல்லாம் தொரைசாமி அய்யங்காருடைதாகவே கொள்வது நியாயம். இந்த வாதி அவர் மனோராஜ்யப்படி தனக்கு இஷ்டம் வந்தபோது தாவாவைச் செய்து மேடோவரை ரத்து செய்விக்கிறவரையில் தன் சொத்தை அடமானத்திலிருந்து மீட்காமல் நஷ்டப்படவேண்டியது அவசியமில்லை. மேடோவரை ரத்து செய்யும்படி டிக்ரியானால் அது மேடோவர் செய்தவரையும் அதை பெற்றவரையும் மாத்திரமே பாதிக்குமேயொழிய இந்த மேடோவர் கான்ஸல் ஆகிறவரையில் அது கிரமமாய் செல்லத்தக்கது என்று மதித்து நடக்க பத்தப்பட்டவர்களை பாதிக்காது. பிரதிவாதி வாதி மேடோவரை ஆக்ஷேபிக்கிறார் என்கிற நோட்டீஸ் கிடைத்த பிறகு இன்டர் பிளீடர் ஸூட் செய்து பணத்தை கோர்ட்டில் கட்டியிருக்கலாம். ஆனால் இந்த மேடோவர் ஆதியாக தாவாவைச்செய்து நிவர்த்திக்கக்கூடியதேயல்லாமல் சட்டப்படி செல்ல தகாததாய் இராதிருப்பதால் முதல் பிரதிவாதி இன்டர் பிளீடர் ஸூட்செய்ய கடமைப்பட்டவரல்ல. மேலும் முதல் பிரதிவாதி வாதியை மேடோவர் பெற்றவர்களுடைய பாத்தியதைக்காக ஜாமீன் கொடுக்கச் சொல்லிக்கேட்டு அவர் மறுத்திருக்கிறார். வாதியும் உடனே தாவாவைச்செய்து முதல் பிரதிவாதி பேரிலும் மற்றவர்கள் பேரிலும் மேடோவருக்காக தொகைகள் செலுத்தக்கூடாதென்று இன்ஜங்க்ஷன் ஆர்டர் வாங்கியிருக்கலாம். அதுவும் செய்யவில்லை. ஆகையால் மேடோவர் பத்திரம் ரத்து செய்த டிக்ரிக்கு முன்னிட்டு மேடோவர் பெற்றவருக்கு கொடுத்த தொகைகளெல்லாம் வாதியைபத்தப்படுத்தும். இந்த அப்பீல் சிலவுடன் தள்ளப்பட்டது.

BOMBAY HIGH COURT.

பாம்பே ஐகோர்ட்.

வேல்சண்ட் சகன்லால்ஷா வாதி.

v.

லெப்ட்டினன்ட். ஆர். சி. சி. விஸ்டன். } பிரதிவாதி.

மார்ச் 26, 1914.

சிவில்பிரோஸீஜர் சோட், செக்ஷன்ஸ் 115-151.

பஞ்சாயத் தீர்மானம் :—மிலிடரி உத்யோகஸ்தர் பேரில் தாவா—பஞ்சாயத் தீர்மானப்படி டிக்ரீ—ஐகோர்ட் ரத்துசெய்பல்.

[பம்பாய் ஐகோர்ட்—அப்பீல் சயிட் சிவில் ஸர்குலர்]

[இந்த ராஜதானியில் சில பாகங்களில் பணம்கொடுக்கல் வாங்கல் செய்யும் வியாபாரிகள் ரொம்ப பணத்திற்குமுடையாயிருக்கும் சிவில் மிலிடெரி உத்தியோகஸ்தருக்கு பிராமிசரி நோட்டின் பேரிலாவது, பாண்டுகளின் பேரிலாவது பணம் கொடுப்பதில்லை. ஆனால் கொஞ்சப் பணத்தைக் கொடுத்து அதிக தொகைக்கு மத்தியஸ்தத் தீர்மானம் வாங்கி, அதைக் கோர்ட்டில் பயில் செய்து டிக்கிரியாகப் பெற்றுக்கொண்டு அதன் பிறகுதான் சிவில் மிலிடரி உத்தியோகஸ்தர்களுக்கும், பயிற் தொழில் செய்யும் ஏழைக் குடிகளுக்கும், பணம் கொடுப்பது வழக்கமாயிருக்கிறது. இது சிவில் கோர்ட்டுகள், இவர்களுடைய வியாபார நடவடிக்கையை தீர விசாரித்து நியாயம், அந்நியாயம் தீர்மானிக்க ஒட்டாமல் அந்தக் கோர்ட்டுகளுக்கு ஜூரிஸ்டிக்‌ஷன் இல்லாமல் செய்வது கருத்து சில ஜட்ஜகளுங்கூட இந்த மத்தியஸ்தத் தீர்மானங்களை செவ்வையாகப்பரிசோதிக்காமல் அந்த அவார்டுபடி டிக்ரி கொடுப்பதாக தெரிகிறது; ஆகையால் இனிமேல் ஜட்ஜ்கள் இப்படி அவார்ட்கள்படி தீர்மானம் செய்வதற்கு முன்னமே, வாதிப் பிரதிவாதிகளுக்குள் தத்துவமாய் தாவா உண்டென்றும் அவர்களுக்குள் அபிப்பிராய பேதம் உண்டென்றும் கிரமமாய் மத்தியஸ்த முசிலிகா ஏற்பட்டதென்றும் தீர தெளிந்து கொள்ளவேண்டு மென்பதை செவ்வையாய் இந்த ஐகோர்ட்டார் உறுத்தித்தெரிவிக்கிறார்கள்.]

1913 ஜூலை 9-ல் வாதி ஒரு சாவுகாரி, விஸ்டன் பிரதிவாதியிடம் 4,931 ரூபாய்க்கு பிராமிசரி நோட் ஒன்று எழுதி வாங்கினர். ஜூலை 11ம்தேதி வாதி பிரதிவாதி இருவரும் அமதபாத் வகீல் பாயிலால் நந்துலால் என்பவரை மத்தியஸ்தராக நியமித்து ஓர் முசிலிகா எழுதிக்கொண்டார்கள், அதாவது, இதில் கையொப்பமிட்டுள்ள நாங்கள் இருவரும் எங்களுக்குள் லாவா தேவி கணக்குகளை பரிசோதித்துப்பார்த்து, 1913, ஜூலை 9-ம் தேதியில் பிறந்த 4,931 ரூபாய் பிராமிசரி நோட்டுப்படி எங்களில் வேல்சஞ்ஜகன் லால் என்பவருக்கு லெப்டினன்ட் ஆர். சி. சி. விஸ்டன் செலுத்தவேண்டியதாக ஜட்ஜ்மென்ட் கொடுக்கும் நிமித்தம் அமதபாத்பிளீடர் பாயிலால் நந்துலால் என்பரை மத்தியஸ்தராக கோரிக்கொண்டோம்.

அதேதினத்தில் இந்த பிரதிவாதி வேல்சங் உமேத்சந்த் என்பவரை தனக்கு வகீலாக நேமித்து அமதபாத் சப் ஜட்ஜ் முன்னிலைக்கு தனக்காக ஆஜராய் பயிலால்நந்துலால் அவார்ட்படிக்கு வேல்சஞ்ஜகன் லாலுக்கு தன் பேரில் டிக்ரி கொடுக்க ஒப்புக்கொள்ளும்படி ஓர் வக்காலத்தும் கையெழுத்துபோட்டுக் கொடுத்தார். மேலும் வாதி பைல் செய்திருக்கும் அவார்டுபடி தன் பேரில் டிக்கிரியாகலாமென்று ஓர் பிரமாண பத்திரிகையும் பிரதிவாதி கையெழுத்துப்போட்டு கொடுத்திருக்கிறார்.

ஜுலை 16-ம் தேதி மத்தியஸ்தர் லிஸ்டன் பேரில் 4,931 ரூபாய்க்கு ஜட்ஜ்மெண்டு கொடுத்து அந்தத் தொகையை வாதிக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 75 ஆக செலுத்தவேண்டுமென்றும் வகீல் பீஸ் ரூபாய் 30 கொடுக்க வேண்டுமென்றும் "அவார்ட்" கொடுத்து விட்டார்.

அதே 16ம் தேதி வாதி அமதபாத் ஸப் ஜட்ஜிகோர்ட்டில் "அவார்டு" படி டிக்ரியாக வேண்டுமென்று சூட் பைல் செய்தார் 18-ம் தேதி பிரதிவாதி ரிட்டன் ஸ்டேட்மெண்ட் தாக்கல் செய்தார்.

22-ம் தேதி ஸப்ஜட்ஜ் அடியிற்கண்டபடி தீர்மானம் செய்தார்:—வாஸ்தவமாய் வாதிபிரதிவாதிகளுக்குள் பிரதிவாதியினிடத்திலிருந்து வாதிக்கு எவ்வளவு பணம் சேரவேண்டும் என்பதைப்பற்றியும், மாதம் ஒன்றுக்கு பிரதிவாதி கிஸ்தியாக வாதிக்கு எவ்வளவு கொடுக்கவேண்டும் என்பதைப் பற்றியும், தாவாயிருப்பதாக தெரியவருகிறது. ஆகையால் ஐகோர்ட் சர்குலர் 6-வது கிளாஸ், 2-வது பாராவில் கண்ட கண்டிஷன்கள் இந்த "அவார்டில்" நிறைவேறியிருக்கிறது. ஆகையால் அது பைல் செய்யத் தக்கதுதான்.

அமதபாத் டிஸ்டிக்ட் ஜட்ஜுக்கு இந்தத் தீர்மானம் தகவலுக்கு வந்தது. அவர் சிவில் பிரோசிஜர் கோட் 115-வது செக்ஷன்படி இந்த டிக்ரியை மாற்றவேணுமாய் அந்த கேஸ் கட்டுகளை ஐகோர்ட்டுக்கு அனுப்பிவைத்தார், அப்படி அனுப்பும்போது இந்தக் கேசில் மத்தியஸ்தர் தீர்மானிக்கும்படியான தாவா வாதி பிரதிவாதிகளில் ஒன்றும் கிடையாதென்றும் இது ஸிவில் கோர்ட்டுகள் ஜுரிஸ்டிக்ஷனை நிவர்த்திக்க ஏற்பட்ட கிர்த்திரம உபாயமென்றும் இதனால் பிரதிவாதி வாதிக்கு ஸர்வஸ்வாதீனனாய் தன் சுதந்தரத்தை இழக்கத் தக்கதாயும் இருக்கிறது.

ஐக்கோர்ட்டார் கட்டுகளை வரவழைத்தார்கள். கட்சிக்காரர்கள் அப்பியர் ஆகவேயில்லை.

சீப்ஜட்ஜ் ஸ்காட்துரை தீர்மானம்:—மிஸ்டர் மொகிலி என்னும் அமதபாத் ஸப்ஜட்ஜ் இந்தக் கோர்ட் ஸர்குலரை கொஞ்சங்கூட கவனிக்காமல் வெட்ட வெளிச்சமான அக்கிரமத்துக்கு கோர்ட்டை உபயோகமாக செய்திருக்கிறார். வாதி ஜுலை 11-ம் தேதி அமதபாதிலாவது, பரோடாவிலாவது வட்டியுடன் செலுத்தத்தக்கதாய் 4,931 ரூபாய்க்கு ஓர் அண்டிமாண்ட் எழுதி வாங்கினர். 11-ம் தேதி பிரதிவாதியிடம் ஓர் மத்தியஸ்த முசிலிக்காவும், மத்தியஸ்தர் அவார்ட்படி டிக்ரிக்கு ஒப்புக்கொள்ள ஓர் வகீலுக்கு வகாலத்தும் எழுதி வாங்கியிருக்கிறார். முசிலிகாவும் வகாலத்தும் அச்சுபாரத்தில் இருக்கிறது.

16-ம் தேதி வாதி அவார்ட் பைல் செய்து அதன்படி டிக்ரியாக வேண்டுமென்று ஒரு பிரியாது பைல் செய்திருக்கிறார். அப்புறம் ஜுலை 21-ம் தேதி வாதி சாவுகாரியினுடைய ஏஜெண்டு, பிரதிவாதிக்கு தன் எஜமானுக்கு சேரவேண்டிய பணத்தை செலுத்த தற்காலம் ஐவேஜி இல்லையென்றும் ஆனதுபற்றி பஞ்சாயத்து நியமிக்கப்பட்டதென்றும் அந்த பஞ்சாயத்தார் மாதக் கிஸ்தியாக கொடுக்கும்படி அவார்ட் செய்தாரென்றும் ஓர் பிரமாணபத்திரிகை போட்டிருக்கிறார்.

22-ம்தேதி ஸப்ஜட்ஜ் இந்த அப்பிளிகேஷனை பைலுக்கு எடுத்துக்கொண்டு வாதி பிரதிவாதிகளுக்குள் வாஸ்தவமாய் தாவா உண்டென்றும் முசிலிகா பேரில் மத்தியஸ்தர் தீர்மானம் அவச்யந்தானென்றும் அவார்ட்படி டிக்ரி கொடுத்துவிட்டார்.

வாதிப் பிரதிவாதிக்களுக்குள் கொடுக்க வேண்டிய தொகையைப்பற்றியாவது மாதம் ஒன்றுக்குக் கட்டவேண்டிய கிஸ்தி இவ்வளவு

என்பதைப் பற்றியாவது யாதொரு தாவாவும் கிடையாது என்பது அவர்களுடைய நடவடிக்கையால் கொஞ்சமேனும் சந்தேகமில்லாமல் தெரிகிறது. ஆகையால் இப்பேர்பட்ட நடவடிக்கைக்கு ஸப்ஜட்ஜ் இடங்கொடுத்தார் என்பது ரொம்பவருத்தமாயிருக்கிறது. மேலும் இப்படி இடங்கொடுத்து டிக்ரி கொடுத்ததை கவனித்தால் அவருக்கு ஜட்ஜாயிருப்பதற்கு வேண்டிய யோக்கியதை ரொம்பகுறைவென்று தோன்றுகிறது.

சிவில் பிரோஸிஜர் கோட் 115-151-வது செக்ஷன்படி அந்த டிக்ரி ரத்து செய்யப்பட்டிருக்கிறது.

ALLAHABAD HIGH COURT.
FULL BENCH.

அலகபாத் ஐகோர்ட்
புல் பெஞ்சு.

ராஜ்நாத், மற்றவர்களும் ... அப்பீல் வாதிகள்.

v.

நாராயண்தாஸ் ... ... அப்பீல் பிரதிவாதி.

S. A. No. 427 of 1913.

வியாஜ்ஜியக்குறிப்பு:—அப்பீல் பிரதிவாதியாகிய நாராயண்தாஸ் வாதியாக 1874-ம் வருஷம் தான் பெற்றிருந்த ஓர் ஈடுகாட்டிய அடமானத்தின் பேரில் தனக்குச் சேரவேண்டிய தொகைக்காக இந்த அடமானத்திற்கு உட்பட்ட நிலங்களை விற்பனைக்குக்கொண்டு வரவேண்டுமென்று தாவா.

இந்த நம்பரில் தனக்கு அடமானம் செய்தவருடைய வார்சுதார்களேயும் இந்த அடமான சொத்தை அனுபவித்துக்கொண்டு வருபவர்களேயும் பிரதிவாதிகளாக சேர்த்திருந்தார்.

அடமானதார் வார்சுகள் எதிர்வியாச்சியம் செய்யவில்லை மற்றப்பிரதிவாதிகள் தாங்கள் 12-வருஷத்திற்கு மேற்பட்டு சொத்துக்காரருக்கு விரோதமாய் அனுபவித்துக்கொண்டு வந்ததாகவும் இதனால் அந்தச் சொத்துக்கு பூரணபாத்தியதை தங்களுக்கு உண்டாகி விட்டதாகவும், ஆகையால் இந்த நம்பருக்கு காலாவதிதோஷம் வந்துவிட்டதாகவும் எதிர்வியாச்சியம் செய்தார்கள். அஸல் கோர்ட்டார் அடமானதார் வார்சுகளுக்கு விரோதமாய் 12 வருஷங்களுக்கு மேற்பட்ட விரோத அனுபவம் ருசுவானதாயும் ஆனால் அந்த அனுபவம் 1891-ம் வருஷம் அடமானப் பத்திரத்துக்குப் பின்னிட்டு ஆரம்பமானதாகையால் ஈடுகாட்டி அடமானம் பெற்றுள்ள வாதியினுடைய அக்கை பாதிக்காதென்றும் அபிப்பிராயம் கொண்டு டிக்ரி கொடுத்தார்கள்.

அப்பீலில் ஜில்லா ஜட்ஜி அசல் தீர்மானத்தைகாயப்படுத்தினர். இதற்குமேல் ஐகோர்ட் இரண்டாவது அப்பீல்.

ஐகோர்ட் தீர்மானம்:—வாதிக்கு ஈடுகாட்டிய அடமானமாகையால் அவர்தனக்குச்சேர வேண்டியதொகைக்கு தாவா செய்து டிக்ரி பெற்று அடமான நிலத்தை ஏலத்தில் வாங்குகிறவரையில் நிலம் சுவாதீனத்துக்காக தாவா செய்ய பாத்தியதையில்லை. நிலம் சுவாதீனத்திற்கு தாவாவாயிருந்தால் 12 வருஷத்திய விரோத அனுபவம் பாதிக்கலாம், வாதியின் தாவா தொகைக்காகவே யல்லது நில சுவாதீனத்திற்கு அல்லாததால் லிமிடேஷன் ஆக்ட் ஆர்டிகில் நம்பர் 144 பொருந்த மாட்டாது. ஆர்ட்டிகில் 132 தான் அதற்கு பொருந்தியது. ஆகையால் 132 ஆர்டிகில் பிரகாரம் ஈடுகாட்டிய அடமான தஸ்தாவேஜின்பேரில் தொகைக்காக தாவா செய்து அந்தத்தொகையைப் பெறும் நிமித்தம் அடமான நிலத்தை விற்பனைக்குக்கொண்டு வருவதற்கு காலாவதிதோஷம் இன்னும் வராததால் இந்த தாவா செல்லும் அன்னியர்களுடைய விரோத அனுபவ பாத்தியத்தை அடமான பாத்தியதையையே பாதிக்காது. ஆகையால் செக்கன்ட் அப்பீல் சிலவுடன் தள்ளிவிடப்பட்டது.

ALLAHABAD HIGH COURT.

அலகபாத் ஐகோர்ட்.

ஷாமகம்மத் ... . வாதி.

v.

காதர் பக்ஷ் .... பிரதிவாதி.

S. A. No. 789 of 1913.

பாகவியாஜ்ஜியம்—ஜூரிஸ்டிக்ஷன்—சிவில் ஸூட் செய்யும்படி ரெவினியுகோர்ட் உத்திரவு—சிவில்கோர்ட் ஸூட்—வேறு ஸூட்செய்வதற்காககோர்ட் உத்திரவு பெற்று உத்டிரா செய்தல்—ரெவினியு கோர்ட் குறித்தகாலம் கடந்து ஸூட்செய்தல்.

வியாஜ்ஜியச்சுருக்கம்:—வாதி சில நிலங்கள் தனக்கு சர்வ சுவாதீனமாய் சொந்தம் என்று லாண்ட் ரெவினியு ஆக்ட் 111–வது செக்ஷன் படி டிக்ளரேஷன் வேணுமென்று கோரினர். ரெவினியுகோர்ட்டார் சில ஆட்சேபணைகள் நிமித்தம் வாதியை மூன்று மாதத்திற்குள் தன்னுடைய பாத்தியதையை ஸ்தாபிக்க சிவில் கோர்ட்டில் தாவா செய்யும்படியாய் உத்திரவு அளித்தார்கள்.

வாதி அப்படியே மூன்று மாதத்திற்குள் நம்பர் தாக்கல் செய்து ஏதோ அல்பதோஷத்தை திருத்திக்கொள்ளவேண்டி வேறு ஸூட் கொண்டுவர அனுமதி பெற்று இந்த நம்பரை உத்டிரா செய்து கொண்டார். மறுதினமே வேறு ஸூட்டும் தாக்கல் செய்து விட்டார்.

பிரதிவாதி இந்த இரண்டாவது தாக்கல் செய்த ஸூட்டு ரெவினியுகோர்ட் உத்திரவில் கண்ட மூன்று மாத காலம் கடந்ததானபடியால் இந்த தாவா நிற்காது என்பது. அசல் கோர்ட்டும் கீழ் அப்பீல் கோர்ட்டும் இந்த ஆட்சேபணையை ஒப்புக்கொண்டு வாதியின் தாவாவை தள்ளி விட்டார்கள்.

வாதியின் இரண்டாவது அப்பீல்.

ஐகோர்ட் தீர்ப்பு:—வாதி தன்னுடன் சேர்ந்த இதர வார்ஸ்தாரர்கள் பேரில் தாக்கலாயிருக்கப்பட்ட சில நிலங்கள் தன்னுடைய சுவாதீனத்திலிருப்பதாயும், அவைகளில் தனக்கு ஒரு பாகம் உண்டென்றும், இந்த குடும்ப சொத்துக்களை பாகித்துக்கொடுத்துக் கொண்டிருந்த அஸிஸ்டென்ட் கலெக்டரிடத்தில் மனு செய்து கொண்டார். அது விஷயத்தில் ரெவினியு கமிஷனர் வாதியை தனக்கும் தன்னோடு சேர்ந்த வார்சுதாரர்களுக்கும் உள்ள விவாதத்தை மூன்று மாதத்திற்குள் சிவில் கோர்ட்டில் நம்பர் செய்து தீர்த்துக்கொள்ள வேண்டுமென்று உத்திரவு செய்தார். வாதி மூன்று மாதத்திற்குள் உத்திரவுபடி ஸூட் தாக்கல் செய்தார். ஆனால் சிவில் புரோசிஜர் கோட், ஆர்டர் 23, ரூல் 1–ன் கீழ் இந்த நம்பரை உத்டிரா செய்துகொண்டு இதே விஷயத்தில் புதிதாக நம்பர் கொண்டு வர அனுமதி கேட்டு உத்திரவு பெற்றுக்கொண்டார். மறுநாள் புது நம்பரும் தாக்கல் செய்தாய்விட்டது.

வாதியின் தாவா:—இந்தச் சொத்துகளில் ஏதோ ஒரு பாகம் தான் அனுபவித்து வருவதாக ஒரு டிக்ளரேஷன் அல்லது அந்த சொத்து தன் சுவாதீனத்தில் இல்லையென்று கோர்ட்டார்கொள்ளும்பட்சத்தில் அந்த சொத்தை தனக்குச் சுவாதீனம் செய்யவேணுமாய் டிக்ரியாவது வேணுமென்று கோரிக்கை. அசல் கோர்ட்டில் சொத்து அவர் சுவாதீனத்தில் தான் இருக்கிறதென்றும் இந்த நம்பருக்கு காலாவிதி தோஷம் வரவில்லையென்றும் அபிப்பிராயம் கொண்டும் அலகபாத் 1901–வது லாண்ட் ரெவினியு ஆக்ட் III, செக்ஷன் 111-வது ரெவினியு கோர்ட் உத்திரவுபடி மூன்று மாதத்திற்குள் செய்யப்படவில்லை யென்று தள்ளி விட்டார். ஜில்லா ஜட்ஜூம் அசல் தீர்ப்பையே காயம் செய்தார்.

ஐகோர்ட் தீர்ப்பு:—முதல் தாவா ரெவினியு கோர்ட் உத்திரவுபடி மூன்று மாதத்திற்குள் எப்போது தாக்கலாகிவிட்டதோ அது முதல் அந்த வியாச்சிய மூலத்திற்கு ஜூரிஸ்டிக்ஷன் சிவில் கோர்ட்டை சேர்ந்துவிட்டது. எப்போது ஜூரிஸ்டிக்ஷன் சிவில் கோர்ட்டாகிவிட்டதோ அது முதல் ஸூட்டை உத்டிராசெய்து மறு ஸூட்டு கொண்டுவர அனுமதி கொடுப்பதும், வேறு தாவாவை வாங்கிக்கொண்டு விசாரணை செய்து தீர்மானிக்கவேண்டிய சர்வாதிகாரம் சிவில்கோர்ட்டே. ஆனது பற்றி வாதியின் தாவாவுக்கு எவ்வித காலாவிதி தோஷமும் கிடையாதென்று தீர்மானித்து கீழ்க்கோர்ட்டிற்கு மறுவிசாரணைக்காக திருப்பப்பட்டது.

ALLAHABAD HIGH COURT.

அலகபாத் ஐகோர்ட்.

அம்பிகாதத் முதலானோர் ... வாதிகள்.

v.

மதுரை கல்வார் ... ... பிரதிவாதி.

S. A. No. 923 of 1913.

ரிஜிஸ்ட்ரேஷன் ஆக்ட், செக்ஷன் 47—முதல் விக்கிரய பத்திரம்—அனுவசியமான கால கரணம் இல்லாமல் ரிஜிஸ்டர் ஆவதற்கு முந்தி இரண்டாவது விக்கிரய பத்திரம் ரிஜிஸ்டர் செய்தது—டிரான்ஸ்பர் ஆப் பிராபர்டி ஆக்ட்—41-வது செக்ஷனுக்கும் ரிஜிஸ்ட்ரேஷன் ஆக்டுக்கும் உள்ள விரோதம்.

வியாஜ்ஜியச்சுருக்கம்:—மாதாபடல் என்ற ஒரு குடித்தனக்காரன் 1900-ம் வருஷம் ஆகஸ்ட் மாதத்தில் தனக்கு அந்த நிலத்திர்வையிலுள்ள பாத்தியதையை இந்த அப்பீல்வாதிக்கு அடமானம் செய்தார். 1909-ம் வருஷம் ஜூன் மாதம் முதல் தேதி இந்த நம்பரில் அசல் வாதிகளும் அப்பீல் பிரதிவாதிகளுமான வருக்கு தனக்குள்ள பாத்தியதையை விக்கிரயம் செய்தார். இந்த விக்கிரய பத்திரம் அந்த மாதம் 18-ம் தேதி ரிஜிஸ்டர் ஆவதற்கு ரிஜிஸ்ட்ரார் ஆபீசில் தாக்கல் செய்யப்பட்டது. ஆனால் இந்த விக்கிரயதாரருடைய சில ஆக்ஷேபனைகளினால் மறுவருஷம் பிப்ரவரி மாதம் வரையில் ரிஜிஸ்டர் ஆகவில்லை. இதன் மத்தியில் மாதாபடல் என்பவர் 1909-ம் வருஷம் ஜூன் மாதம் 11-ம் தேதியே இந்த அப்பீல் வாதிக்கு தன் பாத்தியதையை விக்கிரயம் செய்து பத்திரமும் அன்றையதினமே ரிஜிஸ்டர் ஆகிவிட்டது.

தீர்ப்பு:—இப்போது முதல் முதல் விக்கிரய பத்திரம் அடைந்தவரும் இந்த அப்பீல் பிரதிவாதியுமானவர் 1900-ம் வருஷம் ஆகஸ்டில் ஏற்பட்ட அடமானத்தைப் பைசல் செய்து சுவாதீனம் வேண்டுமென்று ஸூட்செய்தார். அப்பீல் வாதி தான் பெற்றிருக்கிற 1909-ம் வருஷம் ஜூன் மாதம் 11-ம் தேதியில் ரிஜிஸ்டராயிருக்கிற கிரயபத்திரத்தால் தனக்கே சர்வபாத்தியதையே தவிர வாதிக்குயாதொரு அக்கும் கிடையாதென்று மறுத்தார்.

இதில் வாதியினுடைய பத்திரம் முதல் உண்டானதென்றும் அதற்கு பத்து நாள் பின் வரையில் இந்த அப்பீல் வாதியினுடைய பத்திரம் பிறக்கவில்லையென்றும் ருசுவாகியிருக்கிறது. ஆகையால் இந்த அப்பீல் வாதியினுடைய பின் பட்ட பத்திரம் வாதி அப்பீல் பிரதிவாதியின் முதல் பத்திரத்தை பாதிக்காதென்பது நியாயம். ஆனால் இந்த அப்பீலில் முதல் பத்திரம் பெற்ற வாதிக்கு இரண்டாவது பத்திரம் பிறக்குமுன்னமே அப்படி ஒன்று மாதாபடல் இரண்டாவது கிரயம் செய்யப் போகிறாரென்று ஏதோ சமாசாரம் எட்டியிருந்ததாம். அப்படிக்கிருந்தாலும் இந்த முதல் பத்திரத்தை பாதிக்கதக்க காரணம் ஆகாது.

இரண்டாவது கிரயபத்திரம் பெற்ற இந்த அப்பீல் வாதிக்கு தனக்கு முன் ஓர் கிரயபத்திரம் உண்டென்பது தகவல் இல்லையென்றும் அதனால் முன்னே ரிஜிஸ்டர் ஆனது ஆகையால் அதுவே சிலாவணியாகவேண்டுமென்றும் வற்புறுத்தப்பட்டது. இந்த வியாஜ்ஜியத்தில் தகவல் இருந்ததும் இராததும் அனாவசியம். அப்படி தகவல் இல்லாததற்கு இந்த அப்பீல் பிரதிவாதிகள் காரணமல்ல. டிரான்ஸ்பர் ஆப் பிராபர்டி ஆக்ட், 41-வது செக்ஷன்படி முந்தி ரிஜிஸ்டரான பத்திரந்தான் முக்கியமானதென்று வாதிக்கப்படுகிறது. இந்த வியாஜ்ஜியத்தினுடைய சந்தர்ப்பங்களுக்கு அந்த செக்ஷன் உபயோகமாகாது. சொத்து அப்பீல் வாதியின் சுவாதீனத்தில் இருந்தது. அப்பீல் பிரதிவாதிகள் தங்கள் பத்திரத்தை ரிஜிஸ்டர் செய்யதாக்கல் செய்ததற்கு வீணை காலதாமதம் செய்யவில்லை. ஆகையால் டிரான்ஸ்பர் ஆப் பிராபர்டி ஆக்ட் 41-வது செக்ஷனுக்கு அப்பீல்வாதிகள் சொல்லும் அபிப்பிராயங்கள் சரியென்று கொண்டால் அது ரிஜிஸ்ட்ரேஷன் ஆக்டை ரொம்ப விரோதிக்கும் அப்பீல் பிரதிவாதிகளான அசல் வாதிகளின் பேரில் கொஞ்சங்கூட தவறுதலில்லை. அவர்கள் பத்திரம் முன்னிட்டது. ஆகையால் பிரதிவாதிகளின் பத்திரத்தைவிட அதற்கே சிலாவணியுண்டு. ஆகையால் இந்த அப்பீல் சிலவுடன் தள்ளப்பட்டது.

PRIVY COUNCIL.

பிரிவி கவுன்சில்.

கல்கத்தா ஐக்கோர்ட்டு அப்பீல்.

கவுன்சிலர்கள்:—லார்ட் மவுல்ட்டன்,
சர்ஜான் எட்ஜ்,
மிஸ்டர் அமீர் ஆலி.

(1—12—1913.)

பிரமோதியபிரசாத் வகையரு } பிரதிவாதிகள். அப்பீல்வாதிகள்.

v.

தாராச்சண்டு வகையரு—வாதிகள்—அப்பீல் பிரதிவாதிகள்.

வியாஜ்ஜியச்சுருக்கம்:—1 முதல் 9 பிரதிவாதிகளின் முன்னோராகிய கல்லு பாபு என்பவர் மறசாசவுக்கு என்று சொல்லும்படியான கிராமத்தையும் இன்னும் சில கிராமங்களையும் பிரமோதியபிரசாத் ரும்சுமரன் என்கிற இருவர்களிடம் 21—5—1887-ல் அடமானம் வைத்தார்கள். அதன் பிறகு கல்லு பாபு என்பவர் 19—9—1887-ல் அதே கிராமங்களை வாதிகளாகிய தாராச்சண்டுவகையருவினிடம் அடமானம் வைத்தார்கள். அதன் பிறகு 19—7—1889-ல் மூன்றும் முறை கல்லு பாபு அதே கிராமங்களை பிரமோதியபிரசாத் ரும்சுமரன் பிரசாத்திடம் அடமானம் வைத்தார்கள்.

8—10—1890-ல் பிரமோதிய பிரசாத் வகையரு தங்களுக்கு 21-5-1887-ல் எழுதிக்கொடுக்கப்பட்ட அடமானத்தின் பேரில் வியாஜ்ஜியம் கொண்டுவந்து ஷை கிராமங்களை விற்பனை செய்வதற்காக டிக்ரி பெற்றுக்கொண்டார்கள். இப்படி டிக்கிரி கொடுக்கப்பட்ட வியாஜ்ஜியத்திற்கு வாதிகளாகிய தராச்சண்டு வகையருவும் கக்ஷிக்காரர்களாகச்சேர்க்கப்பட்டார்கள். ஆனால் இவர்கள் ஆஜராகவில்லை. பிரமோதியபிரசாத்வகையரு 8—10—1890-ல்

பெற்றுக்கொண்ட டிக்கிரியை நிறைவேற்றி அடமானச்சொத்துக்களை ஏலம் போட்டு தங்களுடைய டிக்கிரித்தொகையை வசூல் செய்துகொண்டு மீதியாயிருந்த ரூபா 12,197—8—3 யை கோர்ட்டில் கட்டினார்கள். 14—1—1891-ல் பிரமோதியபிரசாத் வகையரு தங்களுக்கு கல்லுபாபுவால் 19—7—1889-ல் எழுதிக்கொடுக்கப்பட்ட அடமான ஆதரவின்பேரில் வியாஜ்ஜியம் கொண்டுவந்து டிக்கிரி பெற்று அந்த டிக்கிரியை 22-4-1892-ல் நிறை வேற்றி கோர்ட்டார் கட்டப்பட்டிருந்த ரூ. 12,197—8—3 யை வாங்கிக்கொண்டார்கள். தாராச்சண்டு வகையருக்களுக்கு எழுதிக்கொடுக்கப்பட்டிருந்த அடமானம் தங்களுடைய 19—7—1889 யுள்ள அடமானத்தை விட முந்தியதென்று பிரமோதியபிரசாத்திற்குத் தெரிந்திருந்தும் தாராச்சண்டு வகையருவை இந்த வியாஜ்ஜியத்தில் கக்ஷிக்காரர்களாகவும் சேர்க்கவில்லை. பணத்தை கோர்ட்டிலிருந்து வாங்கப்போகிறதற்கு முந்தியும் தாராச்சண்டுக்கு அறிவிக்க வில்லை.

ஆகவே தாராச்சண்டு வகையரு, தங்களுக்கு 19-9-1887ல்- எழுதிக்கொடுக்கப்பட்ட அடமான ஆதரவின் பேரில் மால்கியர்சப்கோர்ட்டில் வியாஜ்ஜியம் கொண்டுவந்தார்கள்.

பிரதிவாதிகளின் கக்ஷி:—தாவா கிராமம் ஏலம் போடப்பட்ட வியாஜ்ஜியத்தில் வாதிகள் கக்ஷிக்காரர்களாகச் சேர்க்கப்பட்டார்கள். ஆதலால் அவர்களுக்குள் ஜாக்கிரதையர்களிருந்து கோர்ட்டில் கட்டியிருந்த பணத்தைப் பெற்று தங்களுடைய அடமானக் கடனுக்கு உளவடைத்துக்கொண்டிருக்கவேண்டும். மேலும் தாங்கள் சம்பந்தப்பட்டவரையில் வியாஜ்ஜியம் காலாவதி தோஷத்திற்குள்ளாயிருக்கிறதென்று கக்ஷி சொன்னார்கள்.

சப்கோர்ட்டார் தீர்ப்பு:—வியாஜ்ஜியம் காலாவதி தோஷத்திற்குள்ளாயில்லை என்று சொல்லி வாதிக்கு டிக்கிரி கொடுத்தார்கள். பிரதிவாதிகள் கல்கத்தா ஐகோர்ட்டில் அப்பீல் செய்துகொண்டார்கள்.

ஐக்கோர்ட்டார் தீர்ப்பு:—இந்த வியாஜ்ஜியத்திற்கு காலநிர்ணயச் சட்டம் இரண்டாவது ஷெடியூல் 120-வது ஆர்ட்டிகில் பொருந்தாதென்றும் லிமிடேஷன் ஆக்ட் இரண்டாவது ஷெடியூல் 132-வது ஆர்ட்டிகில் பொருந்துமென்றும், ஆதலால் வியாஜ்ஜியம் காலாவதிதோஷத்தால் தீண்டப்படவில்லை என்று சொல்லி அப்பீலைத்தள்ளுபடி செய்துவிட்டார்கள். அப்பீல் வாதிகள் பிரிவிகவுன்சிலில் அப்பீல் செய்துகொண்டார்கள்.

பிரிவி கவுன்சில் தீர்ப்பு:—கோர்ட்டிலிருந்த பணத்தை அப்பீல் வாதிகள் அநியாயமாயும் மோசக்கருத்தாயும் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்று தீர்மானித்தார்கள். அப்பீல் பிரதிவாதிகள் கொண்டுவந்த வியாஜ்ஜியம் அவர்களுக்கு எழுதிக்கொடுக்கப்பட்ட ஸ்தாவர சொத்து அடமானத்தொகையைப் பெறுவதற்காகக்கொண்டு வரப்பட்ட வியாஜ்ஜியம். ஆகையால் அந்த வியாஜ்ஜியத்திற்கு லிமிடேஷன் ஆக்ட், இரண்டாவது ஷெடியூல், 132-வது ஆர்ட்டிகில் பொருந்தும். ஆகையால் வியாஜ்ஜியம் சரியான காலத்திற்குள் கொண்டுவரப்பட்டிருக்கிறபடியால் காலாவதி தோஷத்திற்குள்ளாகவில்லை என்று சொல்லி அப்பீல் தள்ளுபடி செய்து விட்டார்கள். [1914] மா. வி. நோ. 38. Brahmodea Prasad *v.* Tara Chand [1914] M. W. N. 38.

PRIVY COUNCIL.

பிரிவி கவுன்சில்.

கல்கத்தா ஐகோர்ட்டு அப்பீல்.

கவுன்சிலர்கள்:—லார்ட் மவுல்ட்டன்,
சர்ஜான் எட்ஜ்,
மிஸ்டர் அமீர் ஆலி.

(2—2—1914.)

பிஜாய் கோபால் முக்கர்ஜி வகையறு.

வாதிகள் .... அப்பீல்வாதிகள்.

v.

கிரீந்தரநாத் முக்கர்ஜி வகையறு

பிரதிவாதிகள் .... அப்பீல்பிரதிவாதிகள்.

லாபாயின்ட்:—ஹிந்துலா—விதவை பராதீனம்.

தீர்ப்பு:—அவசியம் ஏற்பட்டால் புருஷனுடைய சொத்தை அப்போதிருக்கும் அனந்தர வார்சுகளுடைய சம்மதத்தின் பேரில் பராதீனஞ் செய்ய ஒரு ஹிந்து விதவைக்கு அதிகாரமிருக்கிறது.

அனந்தர வார்சுகளினுடைய சம்மதத்தின் பேரில் ஒரு பராதீனம் 1863-ல் செய்யப்பட்டது. வாதிகள் அதை வெகுகாலம் ஆக்ஷேபிக்கவேயில்லை. அந்தப் பராதீனம் நல்ல எண்ணத்தோடும், அதைச் செலாவணியாக்கும்படியான சந்தர்ப்பங்களோடு செய்யப்பட்டதென்பதற்கு அது சாக்ஷியமாகும்.

அபாயமான நிலைமையிலிருந்த இறந்துபோன புருஷனுடை எஸ்டேட்டு சம்பந்தமாக ஒரு விதவை 60 வருஷங்களுக்கு ஒரு இஜாரா எழுதிக்கொடுத்தாள். அந்த இஜாராவில் குடும்ப விஷயங்களும் செய்யப்பட்டிருந்தது. இந்தக் குடும்ப செட்டில்மெண்டில் குடும்ப சொத்தை அப்போதிருந்த அனந்தர வார்சுகளுக்குப் பிரித்துக்கொடுக்கப்பட்டிருந்தது. விதவை தனக்கு ஜீவனும்சத்திற்கு மட்டிலும் உபாய வருமானத்தை வைத்துக் கொண்டாள். குடும்பக்கிளையைச்சேர்ந்த மெம்பர்கள் எல்லா மெம்பர்களும் அடையும்படியாக அந்த இஜாராவில் செய்யப்பட்டிருந்த குடும்ப செட்டில்மெண்டில் ஏற்பாடு செய்திருந்தனள். அனந்தர வார்சுகளில் ஒருவன் 1882-ல் இறந்துபோனான். இஜாரா எழுதிக் கொடுத்த விதவை 1893-ல் இறந்துபோன பிறகு ஷை அனந்தர வார்சுகளின் புத்திரர்கள் இஜாராவை ரத்துசெய்ய வியாஜ்ஜியம் கொண்டுவந்தார்கள்.

குடும்ப செட்டில்மெண்டுள்பட உள்ள அவசியத்தை முன்னிட்டு இஜாரா ஏற்பாடு செய்யப்பட்டது என்றும் எஸ்டேட்டின் நன்மையை உத்தேசித்து 60 வருஷங்களுக்கு இஜாரா விடப்பட்டிருக்கிறதென்றும் அனந்தர வார்சுகள் அதற்குக் கட்டுப்படவேண்டுமென்றும் தீர்ப்பு செய்யப்பட்டது. 12 அல. லா. ஜெ. 711; Bijoy Gopal Mukerji *v.* Girindra Nath Mukerji, 12 All. L. J. 711. (2-2—1914).

MADRAS HIGH COURT.

மதருஸ் ஐக்கோர்ட்

ப. ர. ல. சாமிநாத செட்டி—அப்பீல்வாதி.

v.

ப. ல. பழணியப்ப செட்டி—அப்பீல் பிரதிவாதி.

லா பாயின்ட்:—மத்தியஸ்தர் தீர்மானம்.

A என்பவர் லேவாதேவித் தொழில் செய்துவரும் ஒரு முதலாளி. B என்பவர் அவருடைய ஏஜண்டாயிருந்து அந்த உத்தியோகத்தர் தரபில் A என்பவருக்கு வரவேண்டிய பணங்களை எல்லாம் வசூல் செய்தும் வாங்கிக்கொண்டும் வந்தார். B என்பவரால் வசூல் செய்யப்பட்டவும் வாங்கப்பட்ட பணங்கள் சம்பந்தமாக ஏஜண்டிற்கும் முதலாளிக்கும் பல தகரார்கள் உண்டாயின. இதன்பேரில் லேவாதேவித் தொழில் செய்துவரும் வேறு

இரண்டு மத்தியஸ்தர்களுக்கு இந்த தகராரை அறிவிக்க சம்மதித்து ஏற்பாடு செய்தார்கள். இவர்கள் கணக்குகளை பரிசோதனை செய்த பின்பு ஒரு ரசீது ஒன்று தயார் செய்தார்கள். அதில் B என்பவர் கையெழுத்து செய்தார். இரண்டு மத்தியஸ்தர்களும் சாக்ஷி கையெழுத்து செய்தார்கள். A என்பவர் இந்த ரசீதை ஒப்புக்கொண்டு ஏற்றுக்கொண்டார். முதலாளிக்கும் ஏஜண்டிற்குமிருந்த தகரார்கள் எல்லாம் இந்த ரசீது தீர்த்துப் போட்டதாக எண்ணப்பட்டது. சட்ட ஒழுங்குப்படி மத்தியஸ்தர்கள் நியமிக்கப்படாமற் போனபோதிலும் அவர்கள் நடத்தின நடவடிக்கைகள் மத்தியஸ்தர் நடவடிக்கைபோலவே யிருக்கின்றன. மேலே சொல்லப்பட்ட ரசீது மத்தியஸ்தர்கள் தீர்மானத்தையும் எப்படி அந்த தீர்மானங்கள் நிறைவேற்றப்படவேண்டுமென்பதையும் அடக்கிக்கொண்டிருக்கிறதென்று தீர்மானிக்கப்பட்டது. 18 கல். வீ. நோ. 617; P. R. L. Saminathan Chetty *v.* P. L. Palaniappa Chetty, 18 C. W. N. 617.

MADRAS HIGH COURT.

மதறாஸ் ஐக்கோர்ட்.

இரண்டாவது அப்பீல் நெ. 1348 of 1912.

ஜட்ஜிகள்:—மிஸ்டர் ஜஸ்டிஸ் சதாசிவய்யர்.
மிஸ்டர் ஜஸ்டிஸ் சேஷகிரி அய்யர்.

சுப்பா நாயுடு வகையரு—பிரதிவாதிகள்
அப்பீல் வாதிகள்.

v.

வெங்கடராமநாயுடு வகையரு—வாதிகள்
அப்பீல் பிரதிவாதிகள்.

லா பாயின்ட்:—சேர்ந்த ஹிந்து குடும்பம்.

வியாஜ்ஜியச்சுருக்கம்:—நாம் இப்போது சொல்லப்போகிற வியாஜ்ஜியம் திருநல்வேலி டி. மு. கோர்ட்டின் அதிகார எல்லைக்குள்ளிருக்கும்படியான சேர்ந்த ஹிந்து குடும்பமெம்பர்களுக்குள் உண்டாயிருக்கிறது. வாதிவெங்கடராம நாயுடு என்பவர் பிரதிவாதிகளாகிய சுப்பா நாயுடு வகையரு விடத்திலிருக்கும்படியான நிலத்தைப் பெற்றுக்கொள்ள டி. மு. கோர்ட்டில் வியாஜ்ஜியம் கொண்டு வந்தார். (O S. 690 of 1909).

பிரதிவாதிகளின் ஆக்ஷேபனை:—(1) குடும்பத்தில் ஆதியில் பிதிரார்ஜ்ஜித சொத்து உபாயமாக இருந்தது. ஆயினும் குடும்பத்திற்கு மானேஜராகயிருந்த தகப்பனுரே சுயமாக பிறகு சொத்துக்களை சம்பாதித்து அவர் பெயரில் வாங்கிக்கொண்டு சேர்த்தார். (2) வாதிக்கு மூக்கு துவாரத்திலிருக்கும் கட்டி பிறவிநோய். ஆதலால் தகப்பனுக்குப்பிறகு வார்சு முறையில் அந்த சொத்தை அடைவதற்கு வாதி பாத்தியமற்றவர் என்று கக்ஷி சொன்னார்கள்.

டி. மு கோர்ட்டார் தீர்ப்பு:—தாவாவில் சம்பந்தப்பட்ட சேர்ந்த குடும்பத்திற்குபோதுமான பிதிரார்ஜ்ஜித மிருந்த தென்றும், வாதியிருப்பதாகச் சொல்லப்படும் நோய் பிறவிநோயல்லவென்று தீர்மானித்து வாதி பக்கம் தீர்ப்பு சொன்னார்கள்.

பிரதிவாதிகள் திருநெல்வேலி ஜில்லா ஜட்ஜி கோர்ட்டில் அப்பீல் செய்து கொண்டார்கள் (A. S. No. 174 of 1911).

ஜில்லா ஜட்ஜி கோர்ட்டார் தீர்ப்பு:—குடும்பத்திற்கு ஆதியில் பிதிரார்ஜ்ஜித சொத்திருந்ததென்று ருஜுப்படுகிறதென்று தீர்மானித்து டி. மு. கோர்ட்டார் கொடுத்த தீர்மானத்தை உறுதிசெய்தார்கள்.

பிரதிவாதிகள் ஐக்கோர்ட்டில் இரண்டாவது அப்பீல் செய்துகொண்டார்கள்.

ஐக்கோர்ட்டார் தீர்ப்பு:—இந்த அப்பீலில் கவனிக்கப்படவேண்டிய பிரஸ்னைகள் இரண்டே இரண்டு. அவையாவன:—

(1) தாவா நிலங்கள் தகப்பனுடைய சுயார்ஜ்ஜிதமல்ல வென்றும் சேர்ந்த குடும்பத்தின் நிலங்கள் என்று ஜில்லா ஜட்ஜி கோர்ட்டார் தீர்மானித்ததில் தவறிப்போ யிருக்கிறார்களோ? (2) வாதிக்கு பிறவிநோயிருப்பதால் தகப்பனுக்குப் பிறகு இந்து லாப்பிரகாரம் வார்சு முறையில் சொத்தை அடைய பாத்தியப்பட்டவரல்ல என்பது நியாயந்தானா? அது விஷயமாக ஜில்லா ஜட்ஜி கோர்ட்டார் தீர்ப்பில் யாதொரு முடிவும் சொல்லாததை முன்னிட்டு இந்தக் கேஸ் மறுபடியும் விசாரணை செய்யப்படும்படியாக ஜில்லா ஜட்ஜி கோர்ட்டாருக்கு அனுப்பப்படவேண்டிய தவசியமா?

மேலே சொல்லப்பட்ட முதல் கேள்வி சம்பந்தப்பட்ட வரையில் கீழ் இரண்டு கோர்ட்டார்களும் பிதிரார்ஜ்ஜித சொத்துக்கள் போதுமானவை யிருந்தன வென்று தீர்மானித்திருக்கிறார்கள். தகப்பனார் மானேஜராகவிருந்துவரும் குடும்பத்திற்கு பிதிரார்ஜ்ஜித சொத்து போதுமானவை யிருந்த தென்று ருஜுப்பட்டால், அந்த சொத்திற்குப் பாதகரமில்லாமல் தகப்பனார் பின்பு சுயமாக சம்பாதித்து அவர் பெயரால் சொத்துகளை வாங்கிச் சேர்த்தார் என்றும் ஆதலால் சுயார்ஜ்ஜிதம் என்று சொல்லப்படும் சொத்துக்கள் அவருடைய சுயார்ஜ்ஜிதமென்றும் யார் கக்ஷி சொல்லுகிறார்களோ அவர்களே அந்த அம்சத்தை ருஜுப்படுத்தக் கடமைப்பட்டவர்கள் என்று மேயின் ஹிந்துலா 291-வது பாராவில் சொல்லப்பட்டிருக்கிறது.

கீழ் இரண்டு கோர்ட்டுகளிலும் பிரதிவாதிகள் இந்த அம்சத்தை ருஜுப்படுத்த தவறிப்போயிருக்கிறார்கள். ஆகையால் கீழ் இரண்டு கோர்ட்டார்களும் இது விஷயமாகச் செய்த தீர்மானம் நியாயமென்று நாங்கள் ஒப்புக்கொள்ளுகின்றோம்.

பிரதிவாதிகள், வாதி தகப்பனுக்கு பிறகு சொத்திற்கு வார்சாகவர இந்து லாப்பிரகாரம் பாத்தியதை யற்றவர் என்று ஜில்லா ஜட்ஜி கோர்ட்டில் ஆர்குமெண்டு செய்யாததால், ஜில்லா ஜட்ஜிகோர்ட்டார் அந்த அம்சத்தைப்பற்றி தீர்ப்பில் யாதொன்றும் சொல்லவில்லை. நிற்க, இந்த அம்சத்தைப்பற்றி ஆராய்வோமானால் டி. மு. கோர்ட்டார் செய்திருக்கும் முடிவிலிருந்து பேதப்படுவோம் என்று நாங்கள் அபிப்பிராயப்படவில்லை. வாதிக்கு உண்டாயிருக்கும் நோய் பிறவி நோய் அல்லவென்று டி மு. கோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள். குருடு, செவிடு முதலிய பிறவிநோய்கள் (மேயின் ஹிந்துலா 596-வது பக்கத்தைப் பார்க்கவும்) வார்சு பாத்தியதையைப் பாதிக்கும். மூக்கு துவாரத்தில் ஒரு கட்டியிருப்பது வார்சு பாத்தியதையை பாதிக்கும்படியான நோயல்ல

பிறவி நோய்கள்கூட வார்சுபாத்தியதையை இந்தக்காலத்தில் பாதிப்பது வெங்கடசுப்பாராவ் v. புருஷோத்தமம் (1), காயாரோகனபத்தன் v சுப்பராயத்தேவன்—ஆகிய இந்தக்கேசில் சந்தேகிக்கப்பட்டிருக்கின்றன.

ஆகையால் இரண்டாவது அப்பீலச்செலவு தொகையுடன் தள்ளுபடி செய்கின்றோம் என்று தீர்ப்பு சொன்னார்கள். 15 ம. லா. டை. 418; Subba Naidu v. Venkatarama Naidu, 15 M. L. T. 418.

குறிப்புகள்.

(1) 26 சென். 133. Venkatasubba Row v. Purushotham, 26 Mad. 133.

(2) 13 ம. லா. டை. 460. Kayarogana Pathan v. Subbaraya Thevan, 13. M.L.T. 460.

MADRAS HIGH COURT.

மதருஸ் ஐக்கோர்ட்.

அப்பீல் நெ. 602 of 1912.

ஜட்ஜிகள்:—மிஸ்டர் ஜஸ்டிஸ் சதாசிவய்யர்.
மிஸ்டர் ஜஸ்டிஸ் ஸ்பென்சர்.

(5—11—1913)

சுப்பராய முதலியார் .... வாதி. அப்பீல்வாதி.

v.

துளசி முதலியார் வகையரு } பிரதிவாதிகள். அப்பீல் பிரதிவாதிகள்.

வியாஜ்ஜியச்சுருக்கம்:—நாகப்பட்டணத்திற்குச் சமீபத்தில் பிரிடிஷ் இலாகாவில் புத்திரனும் பிதாவும் சேர்ந்த ஒரு ஹிந்து குடும்பத்திற்கு ரூ. 800 பொறுமானமுள்ள சொத்திருந்தது பிரென்ச் இலாகாவாகிய காரைக்காலில் ரூ. 4000-ம் பொறுமானமுடைய சொத்துக்களிருந்தன. பிரிடிஷ் இலாகாவிலிருந்த சொத்தை புத்திரன் மூன்று வயதாயிருக்கும் போது பிதா ரூ. 800க்கு விற்பனை செய்துவிட்டார். ஷை சொத்தின்பேரில் குடும்பத்தைக் கட்டுப்படுத்தும்படியான கடன் ரூ. 350 இருந்தது. அந்தக்கடனை ஷை விற்பனைத் தொகையைக்கொண்டு பைசல் செய்துவிட்டு பாக்கியை ரொக்கமாகப்பெற்றுக்கொண்டார் மைனர் புத்திரன் மேஜரானவுடன், தகப்பன் செய்த பராதீனத்தை ரத்து செய்ய வியாஜ்ஜியம் கொண்டுவந்தான்.

கேசின் நடவடிக்கை:—நாகப்பட்டணம் டி. மு. கோர்ட்டில் 363 of 1909 நெ. அசல் வியாஜ்ஜியத்தில் கொடுக்கப்பட்ட டிக்கிரிக்கு விரோதமாக நாகப்பட்டணம் கோர்ட்டில் 129 of 1911 அப்பீல் வியாஜ்ஜியம் தாக்கல் செய்யப்பட்டு கொடுக்கப்பட்ட டிக்கிரிக்கு விரோதமாக, ஐக்கோர்ட்டில் இரண்டாவது அப்பீல் செய்துகொள்ளப்பட்டது.

ஐக்கோர்ட்டு தீர்ப்பு:—மிஸ்டர் ஜஸ்டிஸ் சதாசிவய்யர்:—புத்திரனுக்கும் பிதாவிற்குமுள்ள பாத்தியதைகளை ஒழுங்குபடுத்த பிரிடிஷ் இந்தியாவிற்கப்பாலுள்ள சொத்துக்களை சேர்க்கக்கூடாது. இந்தக்கேசில் குடும்பத்தை கட்டுப்படுத்தின் கடன் ரூ. 350 சொத்துகள் முழுமைக்கு அதன் கிரய மதிப்பிற்குத்தகுந்தபடி பாகிக்கப்பட்டு ஷை குடும்பக்கடனின் பாதியை புத்திரன் செலுத்திய பின்பு, குடும்பசொத்தில் அவனுக்குச் சேரவேண்டிய பாதி பாகத்தை எடுத்துக்கொள்ளும்படி விடப்படவேண்டும். பிரென்ச்இலாகாவிலிருக்கும் சொத்துக்களைப்பிரிவினை செய்ய கட்டாயப்படுத்த பிரிடிஷ் இலாகாக்கோர்ட்டுகளுக்கு அதிகாரமில்லை. ஆதலால் பிரிடிஷ் இலாகாவிற்குள்ளிருக்கும் படியான சொத்துகளில் தனக்கிருக்கும்படியான பாதி பாகத்தை பாகப்பிரிவினை செய்துகொள்ள புத்திரன் கொண்டு வந்திருக்கும் இந்த வியாஜ்ஜியத்தை பிரென்ச் இலாகாவில் குடும்பச் சொத்திருப்பது பாதிக்கமாட்டாது.

மிஸ்டர் ஜஸ்டிஸ் ஸ்பென்சர்:—வாதி மோசக்கருத்துடன் இந்த வியாஜ்ஜியம் கொண்டு வந்திருப்பதாக ருஜுப்பட்டிருக்கிறது. ஆதலால் இந்த வியாஜ்ஜியம் தள்ளுபடி செய்யப்படவேண்டும்.

சி. பு நோ. 98-வது பிரிவின்படி இரண்டு ஜட்ஜிகள் விசாரணை செய்த கேசில் அபிப்பிராயபேதப்படுவார்களேயானல் எந்த கோர்ட்டு டிக்கிரிக்கு விரோதமாக அப்பீல் செய்துகொள்ளப்பட்டதோ அந்தக் கோர்ட்டாருடைய அபிப்பிராயத்தை ஆதரித்து எந்த ஜட்ஜி அபிப்பிராயம் கூறுகிறரோ அந்த ஜட்ஜியின் அபிப்பிராயமே தீர்ப்பாக கொள்ளப்படவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிற படியால் மிஸ்டர் ஜஸ்டிஸ் ஸ்பென்சர் தீர்ப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு வியாஜ்ஜியம் தள்ளுபடி செய்யப்பட்டது [1914] ம. வீ. நோ. 16. Subbaraya Mudaliar *v*. Thulasi Mudaliar [1914] M. W. N. 16.